★ விலை ரூபா 1-25 OFFICE

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

வெள்ளி விழா ஆண்டு

மலர் | தை 24 | ஜ. அல் 4 | இதழ் 356

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 7-2-84

# சு.க.க்கு மீண்டும் அழைப்பு; ஒரு குழுவே ஆராயும்! 22-ல் முடிவு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டில் இரு குழுக்களாக பிரிந்து ஆராய வுள்ள விடயங்களை ஒன்றாகவே அமர்ந்து ஆராய்ந்து முடிவெடுப்பதென நேற்று தீர்மானிக்கப்பட்டது.

சர்வகட்சி மாநாடு நேற்று முற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8-30 வரை நடைபெற்றது. மாநாட்டின் முடிவில் தகவல் தெரிவித்த அமைச்சர் லலித் அத்துலத்முதலி இத்தகவலைத் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி செயலாளர், எதிர்க்கட்சித்தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா ஆகியோரின் கடிதங்கள் மாநாட்டில் வாசிக்கப்பட்டன இதற்குபதிலளித்து திரு. அ. அமிர்தலிங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

பெப்ரவரி 21, 22-ம் திகதிகளில் மாநாடு மீண்டும் நடைபெறும் அப்போது இருகுழுக்

(8-ம் பக்கம் பார்க்க)

# சர்வகட்சி மாநாடு: சுதந்திரக்கட்சி கலந்துகொள்ள மறுப்பு!

## மாநாட்டு செயலாளருக்கு கடிதம்

[இ. கந்தசாமி]

**சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று சுதந்திரக்கட்சியின் உயர்மட்ட அரசியல் குழு தீர்மானித்துள்ளது. நேற்றைய மாநாட்டிலும் கலந்துகொள்ளவில்லை.**

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா உட்பட சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்ட இக் கூட்டத்தின் முடிவு குறித்து மாநாட்டு செயலாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உடன்படிக்கையின் மீது தான் இந்த மாநாடு நடைபெறுகிறது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாலும் இனப்பிரச்சினைக்கு மாநாடு தீர்வு காணும் என்பதில் நம்பிக்கை இழந்துவிட்டதாலுமே மாநாட்டில கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்திருப்பதாக சுதந்திரக்கட்சி பொதுசெயலாளர் திரு ரத்னசிறி விக்கிரமநாயக்கா எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாநாட்டு செயலாளர் நாயகத்துக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ள சுதந்திரக்கட்சி, கூட்டணிக்கும் தென்னிந்தியாவுக்குமிடையேயுள்ள உறவு நமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக அமைகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் இந்தியாவில் தெரிவித்துள்ள பல கருத்துக்கள் மாநாட்டின் முடிவுகளுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## அனுரா கடிதம்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி கலந்து கொள்ளாததால் அக்கட்சியைச்சேர்ந்த என்னாலும் மாநாட்டில் கலந்துகொள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திரா கண்டனம்

(புதுடில்லி)

பிரிட்டனில் இந்திய அதிகாரி சுட்டுக்கொலை செய்யப்பட்டதற்கு தலைவர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

"கோழைத்தனமானகோரச் சம்பவம் இது" என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி தனது இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் முதல்வர் திரு. பாருக் அப்துல்லா வெளியிட்டுள்ள செய்தியில் 'கீழ்த்தரமான குற்றச்செயல் இது" என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

இக் கொலைச்சம்பவம் இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. [கு]

## யாழ். நகரில் கட்டப்பட்டிருந்த சட்டவிரோத கடைகள் இடித்து தரைமட்டம்!

### திடீரென வந்தகுழு உடைத்து வீழ்த்தியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தை மூன்றும் கட்டப்பகுதியில், கட்டப்பட்டிருந்த இருகடைகள் நேற்று இடித்து தரைமட்டமாக்கப்பட்டன!

இக்கடைகள் சட்டவிரோதமாகக்கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இக்கடைகள் 'கொங்கிறீட்' சுவர் எழுப்பி 'ஷீற்' போடப்பட்டு, இரும்புக்கதவும் இணைக்கப்பட்டிருந்தன. நேற்றுக்காலை திடீரென்று வந்த சுமார் 25 பேர் கொண்ட குழு சில நிமிட நேரத்தில் கடைகளை உடைத்து வீழ்த்தியதாகக் கூறப்படுகிறது.

இச்சமயம் வீதியோரத்தில் பெருந்திரளான மக்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். (க-கு)

## பாதுகாப்பான பகுதிகளில் வெள்ள அகதிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகர் வேலணை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருப்பதாக, யாழ் சமூக சேவைப் பகுதியினர் தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நண்பகலுக்குப் பின்னர் மழை சற்று ஓய்திருந்ததால், வெள்ளம் படிப்படியாக வடிய ஆரம்பித்தது. ஆனாலும் நேற்று இரவு மீண்டும் மழை தொடங்கிவிட்டது.

நாவற்குளியிலுள்ள அணைக்கட்டுக் கதவுகளை உடனடியாக திறந்து விடுமாறும் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் நேற்றுக்காலை நீர்ப்பாசன பொறியியலாளருக்கு அனுப்பிய அவசரத் தந்தியில் கேட்டுள்ளார். இந்த அணைக்கட்டுக் கதவுகளைத்திறப்பதன் மூலம்

[8-ம் பக்கம் பார்க்க

## கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட பட்டதாரிஆசிரியர் இடமாற்றம் ஏப்ரலில் அமுலாகும் கல்வி அமைச்சர் கூறுகிறார்

(இ. கந்தசாமி)

கடந்த ஆண்டு செப்டம்பரில் அமுல்செய்யப்பட இருந்து பின்னர் இனக்கலவரம் காரணமாக ரத்துச்செய்யப்பட்ட தமிழ் பட்டதாரி ஆசிரியர் இடமாற்றத்திட்டம் இவ்வாண்டு மார்ச் அல்லது ஏப்ரலில் அமுல்செய்யப்பட இருக்கிறது.

இத்தகவலைகல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

கடந்த ஆண்டு தயாரிக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

## 4 லட்சம் பேர் பாதிப்பு!

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெள்ளப் பெருக்கினால் சுமார் நான்கு லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

வெள்ள நிலைமையில் நேற்று மாலைவரை எந்தவித மாற்றமும் இல்லை ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும்

(8-ம் பக்கம் பார்க்க)

# "கிளிநொச்சி மாவட்டம் முன்மாதிரியாக விளங்கும்"

## செயலகத் திறப்புவிழாவில் அரச அதிபர்

நமது நிருபர்

கே. திருலோகமூர்த்தி)

"கிளிநொச்சி மாவட்டத்தை துரிதகதியில் அபிவிருத்திசெய்வதே எமது நோக்கம் இந்த மாவட்டத்தை ஒரு முன்மாதிரியான மாவட்டமாக மக்களின் ஆதரவுடன் மாற்றி அமைப்பேன்" என்று கிளிநொச்சி செயலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், கிளிநொச்சி புதிய அரசாங்க அதிபர் திரு. என். ஜயநாதன் குறிப்பிட்டார்.



"கிளிநொச்சி மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பிரிந்து விட்டதாக சிலர் குறை கூறுகின்றனர். கிளிநொச்சி ஓர் தனிமாவட்டமாக பிரிந்தாலும், யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் உதவி ஒத்துழைப்பு ஆதரவுடன்தான் புதியமாவட்டத்தை அபிவிருத்திசெய்யவேண்டும். எதுஎப்படியானாலும், யாழ்ப்பாணம்-கிளிநொச்சி உறவுகள் மிகவும் நெருக்கமாகவே இருக்கும். ஒன்றுடன் ஒன்று இணைந்துதான் பாரிய திட்டங்களை நிறைவேற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி செயலகம் திறப்பு விழா

(நமது நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் நேற்றுக்காலை பத்துமணி அளவில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு என் ஜயநாதனினால் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு கே. பாலசிங்கம் மற்றும் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர்கள், உயர் அதிகாரிகள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி அரசாங்க செயலகம் திறக்கப்படுவதற்கு முன்னர், பல வைபவங்கள் நேற்றுக்காலை ஆறு மணி முதல் நடைபெற்றது. ஆலயங்களிலும் விசேட மதவழிபாட்டு வைபவங்கள் இடம்பெற்றன.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டிக்குளி றக்கா லேனில் சகலவசதிகளும் கொண்ட இடத்தில் 2½பரப் புக்காணி உடன் விற்பனைக் குண்டு தொடர்பு 1/1, றக்கா லேன், கண்டிக்குளி, யாழ்ப் பாணம். 604

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக மூன்று கடை வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்குண்டு விப ரங்களுக்கு S. தம்பிராஜா, 131, ஸ்ரேசன் வீதி, யாழ்ப் பாணம். 628

அரியாலையில் தென்னை, மாமரங்களுடன் ஆறு பரப்புக் காணி உடன் விற்பனைக் குண்டு. கா. ஜெகநாதன், சட்டத்தரணி, திருநெல்வேலி அல்லது அரியநாயகம், சட் டத்தரணி, ஏழாலை. 634

நல்ல நிலைமையிலுள்ள வர்ண தொலைக்காட்சிப் பெட்டி 18'' விற்பனைக்குண்டு. தொடர்பு: S. நாகநாதன் 107, பலாலி வீதி, கந்தர் மடம். யாழ்ப்பாணம். 644

Hy-line 4 மாதம், 3மாதம் முட்டை இடும் கோழிகள் உட னடியாக விற்பனைக்குண்டு. P. சண்முகராஜா, தொண்டமா னறு மகாவித்தியாலயம் எதி ராக. 639

சமீபத்தில் இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட Leyland Sherpa 240 Deluxe Diesel Delivery Van 1978ம் ஆண்டு மொடல் (கலனுக்கு 3 மைல் வேலை செய்யக் கூடி யது) விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்புகொள்ளும் முகவரி ஆ. சுந்தரலிங்கம் 85, கொழும் புத்துறைவீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் யாழ்ப்பாணம் 22153 அல்லது 24019, 22254 (622)

## தேவை

சகல அச்சக வேலைகளும் தெரிந்த மெசின் மைண்டர் தேவை. நேரில் வரவும் அல் லது விண்ணப்பிக்கவும். தமயந்தி அச்சகம், மானிப் பாய். 620

I.C.M.A. அல்லது I.A.B. வரை படித்த அல்லது இரண்டு வருடம் கணக்குத்துறையில் அனுபவமுள்ள Accounts Clerk தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம், தமயந்தி அச்சகம், மானிப்பாய். 621

பட்டு நெசவு வேலை செய்வ தற்கு பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 491

கௌரவமான மூவர் கொண்ட குடும்பமொன்றுக்கு வதிவிட வசதிக்காக சிறிய வீடோ அல்லது, பகுதி வீடோ வாடகைக்கு உடனடியாக தேவை. முற்பணம் கட்ட லாம், விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 640, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 640

தமிழும் ஆங்கிலமும் ரைப்பிங் (Typing) தெரிந்த ஒருவர் தேவை. யாழ். நகர் அருகாமையில் வசிப்பவர் நல் லது. இளைப்பாறியவர் விரும் பத்தக்கது. 12ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 646, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 646

## வைத்தியம்

வலி, நரம்புத்தளர்ச்சி, அல் சர், வெள்ளைப்போக்கு, மூலம், சரும ரோகங்கள், நித்திரைக் குறைவு நாட்பட்டதாயினும் பார்த்துச் சிகிச்சை அளிக்கப் படும். டாக்டர் V. T. சந் திரன், 218/5, பலாலி வீதி, கந்தர்மடம். 337

## சேவை

எமது ஸ்ரூடியோவில் வாங் கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங் களுக்கு மேல் பெற்றுக் கொண் டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம் 502

## தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிள் (86ஸ்ரீ 5896) சாரதி லைசென்ஸ் காப்புறுதி, வரி பத்திரம் ஆகி யவை நல்லூர் கந்தசாமி கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். இ. துரைலிங் கம், வடலி அடைப்பு, சங் கானை மேற்கு. 638

3-2-84 (வெள்ளி) இரவு 7½ மணியளவில் கண்டி வீதி யில் (எழுதுமட்டுவாள்-கொடி காமம்) மோட்டார்சைக்கிளில் வரும்போது பல முக்கிய புத்த கங்களும் நிஸ்கோ அதிர்ஷ்ட லாபச்சீட்டு 2 கட்டும், உடை களும்கொண்ட சூலவலைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்த வர் தயவுசெய்து தகவல் தர வும் அல்லது ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். தி சிவதட்சணாமூர்த்தி, இளைஞர் சேவை அதிகாரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 155ம் கட்டை, கண்டி வீதி, கிளிநொச்சி- அல்லது மேற்படி மாவட்டக் காரியால யம், கச்சேரி, யாழ்ப்பாணம். 645

## "வீதியில் கிடந்த வயோதிபரின் சடலம்"

(யாழ்ப்பாணம்)

கடும் குளிருக்கும், பலத்த மழைக்கும் மத்தியில் கடற் கரை வீதியில் ஒரு வயோதி பரின் சடலம், விறைத்த நிலை யில் கண்டுபிடிக்கப்பட்டது.

கடுங்குளிர் தாங்கமுடியா மல் சுமார் 60 வயதான இந்த வயோதிபர் பலியாகியிருக்க லாம் என்று நம்பப்படுகின் றது. கடற்கரை வீதியிலுள்ள மரக்காலைக்குச் சமீபத்தில் கிடந்த இந்த வயோதிபரின் சடலம் யாழ். பெரியாஸ்பத் திரிச் சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளது. இச்சடலம் இது வரை அடையாளம் காணப் படவில்லை.

## வலிமேற்கு உதவி அரச அதிபர்

(பண்டத்தரிப்பு)

வலி தெற்கு உதவி அர சாங்க அதிபர் திரு. ஏ. செய நாயகம் வலிமேற்கு பதில் உதவி அரசாங்க அதிபராக வும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கைலாசபதி அரங்கில் பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கப் பட்டமளிப்பு விழா இம் முறை யாழ். பல்கலைக் கழக 'கைலாசபதி அரங்கில்' நடைபெறவிருக்கிறது.

இவ்விழா இம்மாதம் 11-ம் திகதி காலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசி ரியர் க நடராஜா தலைமை யில் நடைபெறும். (க)


# மலிவுக் கட்டணத்தில் ஓர் அரிய சந்தர்ப்பம்

✯ Basic ✯ Cobol ✯ Fortran

(ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் கட்டணம் 1000/-)

வடமாகாணத்தில் அதிக சக்தி வாய்ந்ததும், புத்தி கூர்மையுள்ள பாரிய Computerஇல் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

✯ I. D. P. M. (Lon - Exam)

பகுதி I, II ஜூன் 84.

✯ ஏயர் கொண்டிசனிங் பயிற்சி

(Air Conditioning)

தொடர்பு கொள்க!

Auto Cool Engineers

சாந்தி சினிமா அருகாமை

683 யாழ்ப்பாணம்.


# இரண்டாவது நினைவஞ்சலி



## கிறிஸ்டி சந்திரன் டேவிட்

CHRISTY CHANDRAN DAVID

தோற்றம் 6-1-1966

மறைவு 6-2-1982

அன்பாலும் பண்பாலும் எம் அனைவரையும் மகிழ்வித்து பிரிந்து சென்று ஈராண்டு பூர்த்தி யாகிறது.

உனது ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

டேவிட் குடும்பத்தினர்

107, விஸ்றவைக் ரோட், மட்டக்குளிய, கொழும்பு-15. 641

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

## சின்னப்பு அப்புத்துரை

பிரபல வர்த்தகர், நீர்கொழும்பு

மலர்வு: 14-01-1906 உதிர்வு: 10-01-1984

10-01-84ல் சிவபதமடைந்த எமது மாமனாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கட்கும் அனுதா பச் செய்தி அனுப்பி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் 09-02 84 (வியாழன்) காலை 7-00 மணியளவில் கீரிமலை யிலும் 12-00 மணிக்கு வீட்டிலும் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்,

வி. க. இராசரத்தினம் பாரியாரும்

வி. க. இராசதுரை பாரியாரும்.

571, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், 642

# 31-வது நாள் நினைவஞ்சலி

## திரு. ஐயாத்துரை சங்கரசிவம்பிள்ளை

(யாழ்ப்பாணம் றேடிங் கொம்பனி உரிமையாளர்)



மலர்வு: 24-10-1922

உதிர்வு: 8-1-1984

தந்தையே எம் அன்புத் தெய்வமே எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே நியதிப் பிரகாரம் எம்மை விட்டுப் பிரிந்து ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மீளாத்துயில் கொண்டு விட்டீர்களே அப்பா. அப்பா என அழைத்தால் அன்போடு அரவணைப்பீர்களே. இனியார் வந்து ஆறுதல் சொல்வார்? அப்பாவின் இறுதிக் கிரியைகளில், நேரில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அனுதா பச் செய்திகள் அனுப்பியோருக்கும் கலந்து கொள்ள முடி யாது வருந்தியோருக்கும், எமது உளமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு, 6-2-84 (திங்கட்கிழமை) அந்தியேட்டி கிரியைகளைத் தொடர்ந்து 7-2-84 (செவ்வாய்க்கிழமை) நடைபெறும். வீட்டுக்கிரிகைகளில் கலந்து எங்கள் அன் புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் குமாறு அன்புடன் அழைக்கும்

மனைவி, பிள்ளைகள்.

''கலாயகம்'' தாவடி தெற்கு, கொக்குவில் 542

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருத்ரோத்காரி வருஷம் தைத்திங்கள் 26 ம் நாள் (9-2-1984) வியா ழக்கிழமை காலை 8-59 மணி தொடக்கம் 9-35 மணி வரையுள்ள மீன லக்கினத் திலும், பரணி நட்சத்திரத்திலும், சித்தயோகத்திலும் கூடும் சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| எங்கள் கனிஷ்ட புதல்வன் | எங்கள் சிரேஷ்ட புதல்வி |
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| நடராஜா | சத்தியபாமா |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம்செய்ய பெரியோர்கள் நிட்சயித்திருப்பதால் மண மகள் இல்லத்தில் நிகழவிருக்கும் திருமணத்திற்கு தாங்கள் தங்கள் குடும்பசமேத 'ராக வருகைதந்து, மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்,

திருமதி செ. காசிப்பிள்ளையும், குடும்பத்தினரும். கைதடி-தெற்கு, கைதடி.

தா. ந. சிவசிதம்பரமும், பாரியாரும். (இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர்) ''சத்தியவாசா'', சங்கானை-கிழக்கு, சங்கானை

(540)

# லெபனான்பிரச்னையைதீர்க்க எட்டு அம்சத் திட்டம்!

## ஜனாதிபதி ஜமாயல் அறிவிப்பு

பெய்ரூட், பெப் 6

லெபனானில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய எட்டு அம்சத் திட்டமொன்றினை லெபனான் ஜனாதிபதி அமின் ஜமாயல் வெளியிட்டுள்ளார்.

நேற்று அவர் வானொலி, தொலைக்காட்சி சேவைகளில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இந்த 8 அம்சத்திட்டத்தினை வெளியிட்டுள்ளார்.

லெபனான்பிரச்னைக்கு எல்லா பகுதியினரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலமைந்த ஜெனிவாப்பேச்சு வார்த்தைகளை உள்ளடக்கியவகையில் இவரது திட்டம் அமைந்துள்ளது.

இதனிடையே பதவியை ராஜினாமாச்செய்த லெபனான் பிரதமர் வஜான் லெபனானில் நிரந்தரத் தீர்வு ஒன்றினைக் காண்பதற்காகவே தான் ராஜினாமாச் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இவரதும் மற்றும் ஐந்து அமைச்சர்களினதும் பதவி விலகலைத் தொடர்ந்து புதிய மந்திரிசபை யொன்றினை அமைப்பது ஜனாதிபதி ஜமாயலுக்கு பெரும் பிரச்னையாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

லெபனானில் நேற்றும் ஷியாஸ் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும், லெபனான் இராணுவத்துக்குமிடையில் கடும் யுத்தம் நடைபெற்று வருவதாகவும், தலைநகரின் சில பகுதிகள் ஷூறாஸ் முஸ்லிம் படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

லெபனானில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தங்களினால் அங்குள்ள அமெரிக்கப் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. [சூ]

---

### அதிதீவிர சிகிச்சைப் பிரிவு

# இயங்க ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப்பிரிவு திறக்கப்பட்ட தன்பின்னர் முதன் முதலாக விஷப் பாம்புக்கடிக்குள்ளாகி அபாயநிலையில் உள்ள ஒரு பெண் அங்கு அனுமதிக்கப்பட்டார். இவர் உடையார்கட்டைச் சேர்ந்தவராம்.

இப்பெண் இப்பொழுது சுகமடைந்துவருவதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.

இதுவரை 3பெண்களும் ஒரு ஆணும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்ததாகவும் இவர்களுள் பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டுவரப்பட்ட பெண் நோயாளி ஒருவர் சுகமடைந்து, மீண்டும் சாதாரண வார்ட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 6 படுக்கைகள் மாத்திரம் இருக்கின்றன. பகலில் 4தாதிகளும், இரவில் இருதாதிகளும் கடமையாற்றிவருகின்றனர்.

இப்பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளின் உறவினர்கள் எவரும் அவர்களைப்பார்வையிட அனுமதிக்கப்படுவதில்லை. (மா)

---

### நிக்கரகுவா மீது

# அமெரிக்க - ஹொண்டுரஸ் ராணுவம் கூட்டுத் தாக்குதல்

நியூயோர்க், பெப் 6

அமெரிக்கா ஹொண்டுரஸின் உதவியுடன் நிக்கரகுவா மீது அண்மையில் நடத்திய இராணுவத் தாக்குதலில் 7 பேர் பலியாகியுள்ளதாக நிக்கரகுவாப் பிரதிநிதி ஐ. நா. பாதுகாப்பு சபையில் தெரிவித்துள்ளார்.

ஐ. நா, பாதுகாப்பு சபையில் உரையாற்றிய நிக்கரகுவா பிரதிநிதி அமெரிக்கா ஹொண்டுரஸின் கூட்டு இராணுவம் நிக்கரகுவாவின் பல இராணுவ நிலைகளைத் தாக்கியுள்ளதாகவும், இதனால் நிக்கரகுவாவுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய அமெரிக்கப் பிரதிநிதி "இத்தகையதொரு இராணுவத் தாக்குதல் இடம் பெறவில்லை"யென்று தெரிவித்தார். (சூ)

---

### பாடசாலை சுவர் இடிந்து

# மாணவன் பலி!

(பண்டத்தரிப்பு)

பாடசாலையில் சிரமதானம் செய்தமாணவர் ஒருவர் சுவர் இடிந்து விழுந்ததால் அதற்குள் நசித்து மரணமான சம்பவம் மாதகல் மேற்கில் நடைபெற்றுள்ளது.

மாதகல் மேற்கைச் சேர்ந்த சுந்தையா கணேசநாதன் (19 வயது) என்னும் க.பொ.த உயர்வகுப்பு மாணவனே இவ்வாறு பலியானவராவர். கடந்த புதன்கிழமை காலம்சென்றவர் தமது பகுதியிலுள்ள மாதகல் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சிரமதான மூலம் துப்பரவு செய்யும் பணியில் ஏனைய மாணவர்களுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தநேரத்தில் ஏற்கனவே வெடித்திருந்த பாடசாலைக் கட்டிடசுவர் இவருக்கு மேல் விழுந்ததாகவும், படுகாயங்களுக்குள்ளான இவரை உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்தபோது அங்கு இறந்து விட்டதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணவிசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில்நடைபெற்று விபத்து மரணமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

---

### விஜயம் ரத்து

(புதுடில்லி)

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த சோவியத் பாதுகாப்பு மந்திரி மார்சல் உஸ்திேனாவ் தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளார்.

---

# கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழக பெயர்பலகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான பொறியியல், விவசாய பீடங்களிற்கான பெயர்ப் பலகை நாட்டுவைபவம் சம்பிரதாயபூர்வமாகநடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பிரதம பாதுகாப்பு அதிகாரி எம். புதிரகிாமணி, பல்கலைக்கழக பொறியியலாளர் என். நாகேந்திரா, கிளிநொச்சி உதவிக் காணி அதிகாரி எஸ். வேலுப்பிள்ளை, யாழ். கச்சேரி நில அளவையாளர், யாழ் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் சிறீஸ்கந்தராசா உட்பட பெருந்தொகையான பல்கலைக்கழக மாணவர்களும் இவ்வைபவத்தின்போது சமூகமளித்திருந்தனர்.

156 மைல்கல் அருகில் கண்டிவீதியில் சிங்கள மகா வித்தியாலய பக்கமாக விவசாய பீடத்திற்கான பெயர்ப் பலகை நாட்டப்பட்டது. இதற்கு எதிர்ப்பக்கமாகஆனந்தபுரத்தில் பொறியியல்பீடத்திற்கான பெயர்ப்பலகை நாட்டப்பட்டது.

பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் குடியிருக்கும் சுமார் மூன்னூறுக்கும் மேற்பட்ட மக்கள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்பட்டனர். பலவருடங்களாக காடுகளை அழித்து களனிகளாக்கி பல லட்சம் ரூபாய் செலவில் பெறுமதி மிக்க கட்டிடங்களைக்கட்டி குடியிருக்கும் எம்மைவெளியேற்ற எடுக்கும் நடவடிக்கையை நிறுத்துங்கள் என அவர்கள் சமூகமளித்த மாணவர்களையும் அதிகாரிகளையும் கேட்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்திற்கென சிங்களமாவித்தியாலயப்பக்கமாக 60 ஏக்கர் காணியும், குமாரசூரியபுரம், ஆனந்தபுரம் ஆகியபகுதிகளை உள்ளடக்கிய பக்கமாக 100 ஏக்கர்காணியும் ஒதுக்கப்பட்டுகச்சேரி நில அளவையாளரால் எல்லைக்கல்லும் அன்றைய தினம் நாட்டப்பட்டது.

---

### இந்திய ஜனாதிபதி கல்கத்தா விஜயம்

கல்கத்தா, பெப். 6

இந்திய ஜனாதிபதி ஜானி ஸெயில்சிங் 4 நாள் பயணமாக இன்று கல்கத்தா சென்றுள்ளார்.

இவர் அங்கு தங்கியிருக்கும் நாட்களில் விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலும், பாரத் என்ஜினியரிங் சங்க பொன்விழாக் கொண்டாட்டங்களிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார். (வெ)

---

### "இந்த வீதிகளிலுள்ள மின்சாரக் கோளாறுகள் விரைவில் தீர்ந்துவிடும்!"

(அரியாலை)

"கனகரத்தினம் வீதியிலுள்ள டிரான்ஸ்போமர் மாற்றியமைக்கப்படவிருக்கிறது. நரிக்குண்டுப் பகுதியில் புதிய டிரான்ஸ்போமர் நிறுவப்படவிருக்கிறது இவைகள் செயல்பட ஆரம்பித்ததும் கனகரத்தினம் வீதி, கலைமகள் வீதி, ஆசீர்வாதப்பர் வீதி, நாவலர் வீதி ஆகிய வீதிகளில் அடிக்கடி ஏற்படும் மின்சார கோளாறுகள் தீர்ந்துவிடும்"

இவ்வாறு யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சி வி கே. சிவஞானம் தம்மை நேரில் சந்தித்த அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையக் குழுவினரிடம் தெரிவித்தார்.

நிலையத் தலைவர் திரு எஸ், பி. ஜீவானந்தம் தலைமையில் சென்ற குழுவினர் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களைக் கையளித்தனர், நிலையக்குழுவினரின கோரிக்கைகளுக்குச் செவிமடுத்தஆணையாளர் அவர்கள் மத்தியில் தொடர்ந்து பேசுகையில் தற்பொழுது மாநகரசபையில் பாவனையிலிருக்கும் 'மேர்க்கியூறி' மின் வெளிச்சத்தினால் அதிக செலவு மாநகர சபைக்கு ஏற்படுகிறது என்றும் இந்தியாவிலுள்ளது போல 'ரியூப்லைட்' களை வீதிகளுக்கு இணைத்து வெளிச்சம் கொடுக்க நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

நிலையத்தலைவர் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் உபதலைவர் திரு. நா சின்னத்துரை, பொதுச்செயலாளர் மா, கனகநாதன் உபசெயலாளர் திரு. இ. குலேந்திரன் பொருளாளர் திரு. தூயகுமார் நிர்வாக சபை உறுப்பினர்களான திருவாளர்கள் வை. கனகரத்தினம் மா மனோகரநாதன் ஆகியோர் இடம் பெற்றனர்.

---

### யாழ். நகரில் சுவாமி பிரேமானந்தாஜி

[யாழ்ப்பாணம்]

சுவாமி பிரேமானந்தாஜி யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

சுவாமி பிரேமானந்தாஜி சுன்னாகம் பூபாலகிருஷ்ண ஆச்சிரமத்தில் நாளைவரை தங்கியிருப்பார் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சுவாமிகளைப் பக்தர்கள் தரிசிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [கு]

---

### "மலையக மக்களின் வாழ்வுக்காக உழைத்தவர்"

(கிளிநொச்சி)

'கிளிநொச்சி வாழ் மலையக மக்களின் நல்வாழ்வே தனது இலட்சியம் என இறுதிவரை பாடுபட்டு வந்த தியாகி சண் சுப்பிரமணியம் அவர்களது திடீர் மறைவு எம்மை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. பல்வேறு சமூக சேவை இயக்கங்களூடாக இவர் ஆற்றிய பணியை நாம் என்றும் மறக்க முடியாது'

இவ்வாறு கிளிநொச்சி முறிகண்டி பொன்னகர் கிராம முன்னேற்றச் சங்க செயலாளரும் மலையகமக்களின் நன்மதிப்பை பெற்றவருமான அமரர் சண் சுப்பிரமணியத்தின் இறுதிக் கிரியைகளின் போது கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றுகையில் காந்தீய இயக்கப் பிரமுகரும் ரேட்டறிக் கழக செயலாளருமான கவிஞர் ப. வை. ஜெயபாலன் குறிப்பிட்டார்.

உலக இந்து மகாசபையைச் சேர்ந்த என் தங்கசாமி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கவிஞர் ப. வை. ஜெயபாலன் மேலும் பேசுகையில், "அமரர் சுப்பிரமணியம் ஒரு சாதாரண தொழிலாளியாக இருந்துகொண்டு தன்னை பொதுச் சேவைக்கு அர்ப்பணித்தவர். இவரது இழப்புக்கு காலம் பதில் சொல்லியே தீரவேண்டு என்றார்.

திரு. ரி. தர்மானந்சிவம், டாக்டர் கே. வி கே. திருலோகமூர்த்தி, கிளிநொச்சி ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபை இணைச்செயலாளர் ரி. எஸ். தர்மலிங்கம், இலங்கை தபால் தந்தி சேவையாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் செ. சபாரெத்தினம், உட்பட வேறு பலரும் அஞ்சலி உரையாற்றினார்கள்.

---

### இந்திய ராஜதந்திரி கடத்தப்பட்டார்

லண்டன், பெப். 6

பர்மிங்காமில் கடத்தப்பட்ட இந்திய ராஜதந்திரியை காஷ்மீர் விடுதலை இராணுவம் என அழைக்கப்படும்பாகிஸ்தானின் பயங்கரவாதக் குழுவொன்று கடத்திச்சென்றுள்ளதாக நம்பப்படுகிறது

பர்மிங்காமில் வைத்து இந்த இந்தியர் அண்மையில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார்.

---

### இன்று முதல் இலட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

அருள்மிகு ஸ்ரீ பாண்டிலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று தொடங்கி 16ம் திகதி வரை தொடர்ந்து பத்துத்தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது

இம்மாதம் 17-ம் திகதி மாசிமகத்தன்று திருவடிநிலையில் காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். [வெ]

**மணிவாக்கு**

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப்பெரிது
—திருக்குறள்

# நமது நோக்கு

## கெட்டகுடியே கெடும்?

1978ல் மட்டக்களப்பை உலுப்பிய சூறாவளிக்குப்பின் அப்பிரதேசம் இயற்கை அன்னையின் ஆத்திரத்துக்குள்ளாவது தர்மமா?

அதுவும் ஐந்துவருட முடிவில் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் செயற்படுவதுபோல் இன்று வெள்ளத்தால் ஏற்பட்ட பேரழிவை நாம் வேறென்னென்று வர்ணிப்பது?

மட்டக்களப்பில் 60 000 குடும்பங்கள் வீடற்றநிலை; எத்தனை பேரென்பது கற்பனைக்கெட்டாத நிலை; பொத்துவிலிலும் அக்கரைப்பற்றிலுமே ஒருலட்சத்து எழுபதினாயிரம் மக்கள் வீடுவாசலின்றித் தவிக்கின்றனரென்றால், முழுமாவட்டத்தின் கதி எவ்வாறிருக்கும்?

தெய்வ அனுக்கிரகத்தால் இதுவரையும் இந்தப் பிரளயத்தில் எவரும் உயிர் இழந்ததாக நாம் அறியவில்லை.

சின்ன அம்பாறையிலேயே 35,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோவில்கள், பாடசாலைகள் கிறிஸ்தவ தேவாலயங்களில் 50,000 மக்கள் தஞ்சம்புகுந்ததாக மட்டக்களப்பிலிருந்து செய்தி சொல்லுகின்றது. ஏனையோர் நிலைமை எவ்வாறிருக்குமென்பது எவரும் யூகித்தறியமுடியும்.

மக்களின்கதி இவ்வாறானால், அவர்களின் உயிருக்கு உயிரான பயிர்ச்செய்கை, அறுவடைகாலத்தில் பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டமை நாடனைத்துக்கும் பெருநட்டமாகும்.

ஒரு லட்சத்துஇருபதினையாயிரம் ஏக்கர் நெற்காணி தேவையற்ற தண்ணீரில் மூழ்கிக்கிடக்கின்றது.

மட்டக்களப்பு, அம்பாறை மட்டுமல்ல, வடபகுதியில் முல்லைத்தீவு, மன்னார் போன்ற பள்ளநிலங்கள் வெள்ளத்தின் வீறுக்கு சரணடைந்தன. முல்லைத்தீவில் 3000 குடும்பங்களும், 80,000 ஏக்கர் காணிநிலமும் பாதிக்கப்பட்டிருப்பதும், மன்னாரின் விளைநிலங்கள், மக்கள் வதியும் பள்ளநிலங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிப்பதும், இயற்கையின் கோரம் வடக்கையும் எட்டிப்பார்த்திருக்கிறதெனக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தை இன்றைய வெள்ளம் விட்டுவைக்கவில்லை. அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை றெயில் சேவை நிறுத்தப்பட்டது ஒரு பெருநட்டமென்று கருதாவிட்டாலும், இந்த இடைவெளியிலுள்ள சுமார் நூறுமைல் தூரத்திலுள்ள தாழ்ந்த பிரதேசங்கள் அனைத்தும் நீரில் அமிழ்ந்துள்ளன.

விடாமழையால், வெள்ளத்தால் இங்கு வாழும் ஏழை மக்கள் வானம் எப்போது வெளிக்குமென்ற ஆர்வத்துடன் காலம் போக்குகின்றனர்.

வறட்சி, வெள்ளம் இயற்கையின் சீற்றமென்று நாம் கருதினாலும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடையும் நாடு இதற்குரியதடுப்பு தொழில் நுட்ப பொறியியலில் தன்னிறைவு காண முடியாதநிலை எவ்வகையிலும் திருப்தியளிக்கும் நிலை எனக்கொள்ள முடியாது.

மகாவலியில் விதைத்த ஏராளமான பணத்தின் ஒரு சிறு பகுதி இன்று தேசத்தின் இன்னொரு பகுதியின் அவல நிலைக்குத் தேவைப்படுகிறதென்பது அடிக்கடி நினைவுறுத்தப்பட்டு வருகிறது.

வடக்கில் ஓரளவிற்கு அராஜகம் நிலவுவதால் இப்பகுதி மக்களுக்கு இத்தண்டனை கடினமானதாகவில்லை எப்போதும்.

நொந்துபோன கிழக்குப்பிரதேசத்தில் ஆட்சியில் செல்வாக்குள்ள அமைச்சர்கள், பிரதிநிதிகள், எம். பிக்கள் தங்கள் கடமையைத் துரிதமாகப் புரிந்து வர்ணிக்கமுடியாத துயர்களால் பரிதவிக்கும் மக்களுக்கு, அரச, தனியார் நிவாரணம் அனைத்தையும் திரட்டவேண்டும்.

தமிழ் மக்களுக்கெனக் கிடைத்த தண்டனை என்ற மூட நம்பிக்கையில் ஈடுபடாமல், வெள்ளம், வறட்சி, இயற்கையின் தீவிரமென, அதற்கு மனிதனின் வகுப்புவாதம் புரியாத பாடமென்ற உண்மையில் நாமனைவரும் புனரமைப்பில் தீவிர பங்கு கொள்வோம்.

# சர்வ கட்சி மாநாடு
# சிங்களவர் மத்தியில் அவநம்பிக்கை! - ஜே. ஆர். கவலை

(கொழும்பு)

"சிங்கள மக்களிடையே அவநம்பிக்கை ஆழமாக இருக்கிறது. சர்வகட்சி மகாநாட்டில் முன்வைக்கப்படும் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மேலும் அதிகளவு நிபந்தனைகள் எதிர்தரப்பினரால் கொண்டு வரப்படலாம். இவ்வாறு கொண்டுவரப்படும் நிபந்தனைகள் யாவும் ஏற்கப்பட்டால் இந்நாட்டில் சிங்கள இனமும், நாட்டு ஒற்றுமையும் பாதிக்கப்படலாம் என்பதுவே பெரும்பான்மையினரான சிங்களவர்களின் அவநம்பிக்கையாகும், இந்த அவநம்பிக்கையே மகாநாட்டில் இருந்துவரும் பிரச்னையாகும்."

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா கொழும்பில் ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பேட்டியின் போது பயங்கரவாதம், பிரிவினைவாதம், இனஒற்றுமை, அரசியல் நடவடிக்கைகள், சர்வகட்சி மகாநாடு ஆகியன பற்றி ஜனாதிபதி ஜயவர்த்தனா தம்மைப் பேட்டிகண்ட பத்திரிகையாளருடன் பிரஸ்தாபித்தார்.

"இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இலங்கை சர்வகட்சி மகாநாடு பூரண வெற்றி பெறும், ஜனாதிபதி ஜயவர்த்தனா நல்ல முடிவுகாண்பார்" என்று கூறிவருகிறார். இது பற்றி என்ன கூறுகிறீர்கள்? என்று கேட்கப்பட்டது.

"அவர் அப்படிக் கூறுவது முற்றிலும் சரியானது. எப்படியும் இம்மகாநாட்டை வெற்றிபெறச் செய்வேன்" என்று திரு. ஜயவர்த்தனா கூறினார்.



"இலங்கையில் நாடற்றவர் பிரச்னை பெரும் பிரச்னையாகவுள்ளது. இதனால் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் அவப்பெயர் தோன்றும் நிலை காணப்படுகிறது. சர்வகட்சி மகாநாடு இப்பிரச்னைக்கு தீர்வுகாணுமா?

"இப்பிரச்னை ஒருமனிதாபிமானமானது. மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகள் அனைவரிடமும் இப்பிரச்னைமீது அனுதாபம் கொள்ளச் செய்வதில் வெற்றிகண்டுள்ளோம். இப்பிரச்னை அரசியல் பொருளாதார ரீதிகளில் எதுவித பிரச்னையையும் கிளப்பவில்லை. ஆகையினால் இதனை நாம் எப்படியும் தீர்க்க வேண்டும்" என்றார் ஜனாதிபதி.

"அப்படியானால் சுமார் ஒரு லட்சம் நாடற்றவர்கள் இலங்கைப் பிரஜைகளாவார்களா? என்று கேட்கப்பட்டபோது,

"வெகு விரைவில் இப்பிரச்னைக்கான தீர்வு குறித்து ஒரு அறிவித்தல் வெளியிடப்படும்" என்று அவரால் பதில்தரப்பட்டது.

"அண்மையில் அனுபவமும் திறமையும் வாய்ந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் இலங்கை வந்திருந்தனர். இனங்கள், மதங்களுக்கிடையே சமத்துவம் காணும் உங்களின் பணிக்கு கல்வியறிவுடைய சிங்களவர்கள், இடதுசாரிகள், சிங்கள எதிர்க்கட்சிகள், அண்மையில் பிரபலமாகி தற்போது மறைந்து வாழும் இடதுசாரிகளாலேயே இடைஞ்சல்கள் தோன்றியுள்ளன என்பது அவர்களின் கருத்துக்களில் ஒன்று. இதுபற்றி யாது கூறுகிறீர்கள்?"

"இக்கருத்து சரியானதாக இருக்கலாம். ஆனால் எனது நிலையை இது எவ்விதத்திலும் பாதிக்காது. சிலகட்சிகள் தமது வாக்காளர் பற்றியே சிந்திக்கின்றன. பெரும்பான்மையான சிங்களவர்கள் இந்த நிலைமையைத் தமக்கு சாதகமாக்கப்பார்க்கிறார்கள். அவர்களிடம் சுயநலம், குறுகிய மனப்போக்கே காணப்படுகிறது" என்று பதில்தரப்பட்டது.

"மேடையொன்றில் தமிழர்களையும், பயங்கரவாதிகளையும் மனமாற்றம் செய்ய வடக்கே செல்ல வருமாறு பௌத்த சங்கத்தினரை அழைத்துள்ளீர்கள். இந்த அழைப்பு புத்திசாலித்தனமானதா?

"என்னிடம் புத்திசாலித்தனம் நன்கு இருக்கிறது. எதையும் புதிதாக நான்கூறவில்லை, புத்தபிரான் 'முன்னே செல்' என்று கூறியதையே நான் திருப்பிச் சொன்னேன்' என்றார் ஜனாதிபதி. (கி)

## மின் பாவனையில்
## அரசு கோரிக்கையும் பாவனையாளர் நிலையும்

மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்கும் படி அரசு அடிக்கடி வானொலி மூலமும் பத்திரிகைகள் மூலமும் அறிவுறுத்துகின்றது. ஆனால் அவர்கள் பாவனைக்கு பணம் அறவிடும் முறையை பார்த்தால் மக்கள் மின் பாவனையை குறைத்து பாவிப்பார்கள் என எண்ண முடியாது. ஏனெனில் சாதாரணமாக 12 அலகுகள் பாவித்தால் என்ன 22 அலகுகள் பாவித்தால் என்ன ஒரே தொகை பணமே அறவிடப்படுகின்றது. அதே போல் மூன்று லையின் மின்சாரத்தை பாவிப்பவர்கள்ளிடமும் 200 அலகுகள் பாவித்தால் என்ன 900 அலகுகள் பாவித்தால் என்ன ஒரே தொகை பணமே அறவிடப்படுகின்றது! ஆகவே 12 அலகு பாவித்தவர்கள் 22 அலகுகளை பாவிக்க நினைப்பார்கள் 200 அலகு பாவித்தவர்கள் 900 அலகுகளை பாவிக்க நினைப்பார்கள். இப்படி என்றால் எப்படி அரசு மின்சாரத்தை குறைத்து பாவிக்க என்ன நடவடிக்கையை எடுத்தாலும் முயற்சி பயன் அளிக்காதே. ஆகவே எனது அபிப்பிராயப்படி ஒரு அலகுக்கு இவ்வளவு கணம் என இருந்தால் தான் மின்சாரபாவனையை கட்டுப்படுத்த முடியும்.

எஸ். எஸ். ஜீவா
வட்டுக்கோட்டை.

## யாழ் காங்கேசன்துறை வீதி

யாழ். இந்துக்கல்லூரிக்கும் சிவதொண்டன் நிலையத்திற்கும் முன்பாக ஒரே வெள்ளக்காடு வாகனங்கள், பாதசாரிகள், பள்ளி மாணவர்கள் முழங்கால் மட்டும் உள்ள தண்ணீரில் செல்கிறார்கள். இதுபற்றி அயலவர்கள் மாநகரசபைக்கு முறைப்பாடு கொடுத்தால்வடிகால் திருத்துவது தமது நிர்வாகத்திற்கு உரியதல்ல என்கிறார்கள் பெருந்தெருக்கள் திணைக்களம் வடிகால்போடுவது தங்கள் நிர்வாகத்திற்கு உரிய வேலையில்லை றேட்டிற்கு கல்லுப்போடுவது தான் தங்கள் வேலை என்கிறார்கள் இவ்விரு நிர்வாகத்தினரும் பொதுமக்கள் கஷ்டத்தை உணர்வதாகத் தெரியவில்லை. யாழ்: முன்னாள் முதல்வர் இவ்வழியால் தினம் நான்கு அல்லது ஐந்து தடவை தனது ஜீப்பில் செல்கிறார் இவராவது எடுத்துச் சொல்லாரோ.

வி. எஸ். இராமனாதர்
யாழ்ப்பாணம்.

**மக்கள் கருத்து**

## சுழிபுரம் மின்குறைபாடு

எமது பகுதிக்கு சுழிபுரம் உப அபிவிருத்திச்சபை மின் வழங்கலுக்கு பொறுப்பாக இருக்கின்றது. வழக்கம்பறையிலுள்ள படி கூட்டு படிகுறை மாற்றி (ட்ரான்ஸ் போமர்) ஒன்றின் மூலம் விநியோகம் செய்யப்படும் மின்சாரம் மிகவும் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது அதிலும் குறிப்பாக சுழிபுரம் பறளை வீதியிலிருந்து விநியோகிக்கப்படும் மின்சாரத்தில் இக்குறை அதிகம். இக்குறையால் மின் குமிழ்கள் அழுது வடிகின்றன புளோரொளிர்வுக் குழாய்கள் (ரியூப் லைட்) ஒளிர மறுக்கின்றன. தொலைக்காட்சிப் பெட்டி ஒலிப்பதிவுக்கருவி, குளிர் சாதனப் பெட்டி ஆகியன மின்னிறக்கத்தால் பாதிப்படைகின்றன. இவற்றின் உள்ளுறுப்புகள் இதனால் பாதிப்படையுமோ என்றஞ்ச வேண்டியுள்ளது. இவற்றுக்கு மேலாக இம்மங்கலொளியில் தமது படிப்பை மேற்கொள்ளும் இளம் சிறார்கள் முதல் பெரியோர்வரை கண் பாதிப்பை வேறு சம்பாதித்து விடுவரோ என்றச்சமடைய நேரிடுகின்றது.

இது சம்பந்தமாக நாம் உப அபிவிருத்தி சபையுடன் தனிப்படவும் விண்ணப்பமாகவும் அறிவித்தபோதும் உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை இந்நிலை தொடர்ந்து நீடிக்காமல் உரிய அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

வ. இராசேஸ்வரன்
சுழிபுரம்.

## நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புதிதாக அமைக்கப் பெற்ற கைலாசபதி கலையரங்கு திறப்புவிழா தொடர்பாக இராமநாதன் நுண்கலைக் கழகம் விசேட கலை நிகழ்ச்சியினை நாளை மாலை நடாத்தவுள்ளது.

இக்கலையரங்கில் எதிர்வரும் 10ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம் திருமதி இராமநாதன் நினைவுப் பேருரையை ஆற்றுவார். (சு)

## கோரிக்கை

(மன்னார்)

பேசாலை பகுதியிலிருந்து பேசாலை உப அலுவலகத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியையேனும் பேசாலைப் பகுதி அபிவிருத்திக்குச் செலவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பேசாலை கிராமோதய சபை தலைவர் திரு. அன்ரன் ஜேக்கப் குருஸ், மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெ[illegible] செல்லத்துரையிடம் கோரியுள்ளார்.

## இந்தியத் தூதரக அதிகாரி சுட்டுக் கொலை!

லண்டன், பெப். 6

கடந்த வெள்ளிக்கிழமை காஷ்மீர் விடுதலை இராணுவம் என அழைக்கப்படுபவர்களினால் கடத்திச்செல்லப்பட்ட பர்மிங்காமிலுள்ள இந்திய தூதரகத்தின் இரண்டாவது உயர் அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பட்டப்பகலில் இவர் மேற்படி இயக்கத்தினரால் கடத்தப்பட்டார். இவரை விடுதலைசெய்வதற்கு காஷ்மீரில் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலைசெய்யவேண்டுமென்றும் 10 லட்சம் பவுண் ஸ்ரேர்லிங் பணம் தரவேண்டுமென்றும் மேற்படி இயக்கத்தினர் தெரிவித்தனர்.

ஆர். எம். மைத்ரே என்ற இந்த ராஜதந்திரி ஒரு பண்ணைக்கருகில் பிணமாகக்கிடந்தாரென்று பிரிட்டிஷ் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## யாழ். பொது நூலக வேலை துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலகக் கட்டடத்தின் கூரைக்கான 'கங்கிறிட்' போடப்பட்டது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், மாநகரசபை பொறியியலாளர் திரு. தவரத்தினம், பொறியியலாளர்கள் திரு நடேசன், திரு. நாகநாதன் மற்றும் நூல்நிலையக்குழு உறுப்பினர்கள் கங்கிறிட் போடப்பட்ட சமயம் சமுகமளித்திருந்தனர். (க)

## முதலாளியின் பணத்தைத் திருடிய தொழிலாளி கைது

(மன்னார்)

திருமணச் செலவுக்காகப் பெட்டியினுள் வைத்திருந்த 9,700 ரூபா பணத்தை முதலாளியுடன் ஒரே அறையில் படுத்துறங்கிய தொழிலாளி திருடிச்சென்ற சம்பவம் வங்காலையைச் சேர்ந்த தோமஸ் பங்கிராஸ் வாஸ் என்பவரது வீட்டிலேயே இடம்பெற்றது.

சம்பவதினம்முதலாளியுடன் ஒரே அறையில் படுத்துறங்கிய தொழிலாளி ஒருவர் முதலாளி நன்கு உறங்கியசமயம்பார்த்து முதலாளி பெட்டியினுள் வைத்திருந்த 9,700 ரூபாவையும் திருடிக்கொண்டு தலைமறைவாகிவிட்டார்.

அதிகாலை 4 மணிக்கு கண்விழித்த முதலாளி தொழிலாளியையும், பணத்தையும் காணாததால் மன்னார் பொலிஸில் புகார் செய்தார். திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட மன்னார் பொலிஸ்நிலையசார்ஜன்ட் திரு. பி. வேலாயுதபிள்ளை பணத்தைத்திருடிய தொழிலாளியை தலைமன்னாரில்வைத்து கைதுசெய்ததுடன் திருடப்பட்ட பணத்தில் 9,500 ரூபாவையும் மீட்டார்.

## சைக்கிள் திருட்டுகள் அதிகரிப்பு

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் சைக்கிள் திருட்டுக்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. கச்சேரி, சில தனியார் கல்விநிறுவனங்கள் முன்பு இத்திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன.

இது பற்றி யாழ். பொலிஸில் புகார்களும் செய்யப்பட்டுள்ளன. ஒரு திட்டமிட்டகோஷ்டியே இதை செய்வதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பனந்தொழில் அபிவிருத்தி: யாழ். நகரில் பயிற்சி வகுப்பு

[வண்ணார்பண்ணை]

பொதுநல நாடுகளின் பனை வள ஆலோசகரும், இந்திய பனைத்தொழில் நிபுணருமான கே. சம்பந்தத்தினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் மூலவள உற்பத்தியும் பனைத்தொழில் அபிவிருத்தியும் ஏற்றுமதியும் தொடர்பான பயிற்சி வகுப்பு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது. பனைஅபிவிருத்திச் சபையின் ஆதரவில் நடைபெறும் இந்த மூன்று மாதகாலப் பயிற்சியில் ஆண்கள், பெண்கள் மொத்தம் முப்பது பேர் பயிற்சி பெறுகின்றனர்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி ஆரம்ப வைபவத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா, திருமதி சம்

[7-ம் பக்கம் பார்க்க]

## புதிய வார்ட்டுகளை அமைக்கக் கோரிக்கை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு மேலும் 4 புதிய வார்ட்டுகளை அமைத்துத்தருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சுகாதார அமைச்சரிடம் கோரியுள்ளது.

சமீபத்தில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அமைச்சரிடம் மேற்படி சங்கம் மகஜர்ஒன்றை கையளித்தது.

அம்மகஜரிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது. புற்றுநோயாளர்களுக்கென இரு வார்ட்டுகளும், மனநோயாளர்தொகை அதிகரித்து வருவதால் மனநோயாளர்களுக்கென இரு வார்ட்டுகளும் அமைத்துத்தருமாறு கோரப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரம்உயர்த்தி வைத்திய வசதிகளை அதிகரிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல், வைத்திய நிபுணர்களை நியமித்தல், வைத்தியசாலைக்கென காணிசுவீகரித்தல் போன்றபல் வேறு கோரிக்கைகளும் இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சிவராத்திரி விழா தண்ணீர்ப்பந்தல்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரத்தில் இம்மாதம் 29ம் திகதி நடைபெறும் மகாசிவராத்திரி விழாவின்போது பெருந்தெருச்சந்திக்கருகில் தண்ணீர்ப்பந்தல் நடத்தப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை உதவி நிறைவேற்றுப் பொறியலாளர் திரு எஸ். இராமகிருஷ்ணன் மேற்கொண்டு வருகிறார்.

## கடும் மழையினால் பயிர் பாதிப்பு: நிவாரணம் வழங்கும்படி யாழ். அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பலஉப உணவுப் பயிர்களும் அவற்றைச் செய்கைபண்ணிய விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருப்பதையும் இப்பாதிப்புக்களுக்கான நிவாரணத்தைவழங்கும்படியும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு மகஜர்ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. இம்மகஜரை வலிகிழக்கு அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நேற்றுக் கையளித்தது.

"உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், பீட்ரூட் போன்ற மரக்கறி வகைகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இவற்றை உற்பத்தி செய்த வலிகிழக்கு அச்சுவேலிப் பகுதி விவசாயிகள் பொருளாதார ரீதியாக நஷ்டம் அடைந்துள்ளனர். இத்துடன் பலர் இருப்பிடங்களையும் இழந்துள்ளனர்" என்று அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விளை நிலங்கள்பற்றி அம்மகஜரில் தரப்பட்டுள்ள விபரம் வருமாறு: உருளைக்கிழங்கு - 460 ஏக்கர்கள், வெங்காயம்-930 ஏக்கர்கள், மிளகாய் 215 ஏக்கர்கள் மரக்கறிகள்-165 ஏக்கர்கள்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்க்கும்படியும், நஷ்டஈடுகளை உடன் பெற்றுத்தரும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

அம்மகஜரின் பிரதிகள் விவசாய அமைச்சுக்கும், அவ்வமைச்சு சார்ந்த அமைப்புக்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ஐ)

யாழ்ப்பாணத்தில்

## மருத்துவத்துறை உயர் கல்வி நிறுவனம்: ஜனாதிபதிக்கு அத்தபத்து சிபார்சு?

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மருத்துவ கலாநிதிகள் தமது தொழிற்கல்வியைத் தொடரும் வகையில் மருத்துவத்துறை உயர்கல்வி நிறுவனம் நிறுவுவது சம்பந்தமாக சுகாதாரஅமைச்சர் டாக்டர் இரஞ்சித் அத்தபத்து ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வார்.

யாழ்ப்பாண மருத்துவ கலாநிதிகள், மருத்துவத்துறைப் போதனாசிரியர்கள் இது சம்பந்தமாக வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்தே சுகாதார அமைச்சர் இவ் வாக்குறுதியை வழங்கியுள்ளார். இத்தகைய மருத்துவத்துறை உயர்கல்வி நிறுவனம் மருத்துவ கலாநிதிகளின் கல்வித் தராதரத்தையும், தொழிற் திறமையையும் உயர்த்தப் பேருதவியாக இருக்குமென்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசாங்கம் காணி கொடுக்குமிடத்து, இத்தகைய கல்வி நிறுவனத்தை யாழ்ப்பாண மருத்துவ கலாநிதிகள் சங்கம் உரிய கட்டடத்தைத்தன் செலவில் அமைத்துக் கொடுக்கும். இத்தகைய நல்ல முயற்சிக்கு வேண்டிய நிதியம் உள்ள போதிலும், அதனால் அரசுக்கு அதிக செலவு ஏற்படாத போதிலும், அனுமதி மறுக்கப்படுவது கவலைதரும் செயலாகும் என்று மருத்துவ கலாநிதிகள் சுகாதார அமைச்சரிடம் கையளித்துள்ள மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மருத்துவ கலாநிதிகளின் முதுமானிப் படிப்புக்கு உரிய கவனம் எடுப்பதில் அரசு சிரத்தைகாட்ட வேண்டும். கொழும்பில் உள்ள இத்தகைய கல்வி அமைப்பு யாழ்ப்பாணத்துக்கு சம்பந்தப்பட்ட பாடநூல்கள், உசாத்துணை நூல்கள், மருத்துவ சம்பந்தமான சஞ்சிகைகளை அனுப்புவதுடன், பகுதிநேர விரிவுரையாளர்களையும் நியமிக்க வேண்டும் என்றும் இம்மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## சத்திர சிகிச்சை நிபுணரில்லை நோயாளர் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர் பிரசவ வைத்திய நிபுணர் ஆகியோர் இல்லாததால் நோயாளிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர், பிரசவ வைத்திய நிபுணர் இல்லாததால் பிரசவ தாய்மார்கள் யாழ்ப்பாணம், அநுராதபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியநிலைஏற்பட்டுள்ளது.

ஜூலையில் இடம்பெற்ற வன்செயல்களின் போது மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய சத்திர சிகிச்சை நிபுணர் பிரசவ வைத்திய நிபுணரும் இதுவரை கடமைக்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## செட்டிகுளத்தில் பிடிக்கப்பட்ட யானை பரிபாலன அதிகாரிகளிடம் ஒப்படைப்பு!

[வவனியா]

செட்டிக்குளத்தில் பிடிக்கப்பட்ட யானைக்குட்டி வனபரிபாலன அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

செட்டி குளத்தில் கிணறு ஒன்றினுள் விழுந்து கிடந்த யானைக்குட்டியினை அப்பகுதி பொதுமக்கள் மீட்டு செட்டிகுளம் உதவி அரச அதிபர் பணிமனையில் தடுத்து வைத்தனர்.

பின்னர் இதுபற்றிவவனியா பொலிசாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

வவனியா பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து யானைக்குட்டியினை வனபரிபாலன அதிகாரிகளிடம் கையளித்தனர். [சூ]

## பிணையில் செல்ல அனுமதி

(வேலணை)

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சின்னையா ஞானப்பிரகாசம் என்பவரை அதே ஊரைச் சேர்ந்த திரு எஸ். மாக்கோகியான் என்பவர் கத்தியால் குத்தி படுகாயம் விளைவித்ததாக ஊர்காவற்றுறை பொலிஸில் செய்துகொண்ட முறைப்பாட்டையடுத்து சந்தேகநபரை கைதுசெய்த பொலிசார் இவருக்கு எதிராக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல்செய்துள்ளனர்.

இவ்வழக்கை விசாரணை செய்த நீதிபதி சந்தேகநபரை ஆயிரம் ரூபா ரொக்கமும், இரண்டாயிரம் ரூபா ஆளைப் பிணையிலும் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சிறுவர்கள் மத்தியில்

## இனவாதமற்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத் திட்டம்

(நல்லூர்)

சிறுவர்கள் பாலர்கள் உற்ற வாலிபர்களின் மத்தியில் இனவாதம் கலவாத ஒரு விழிப்புணர்வைஏற்படுத்தும் வேலைத்திட்டமொன்றை 1984 ஆம் ஆண்டு கருத்துப் பரிவர்த்தனை அபிவிருத்திக்கான இயக்கம் செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் எழுதப்படுவதுடன் படங்களும் தயாரிக்கப்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. நாட்டில் உள்ள பலவேறு இனமக்களிடையே ஒரு புரிந்துணர்வினை ஏற்படுத்தும் வகையில் சிறுவர்களின் அறிவு, நாட்டம் உணர்ச்சிகளுக்கு ஏற்பவே இவை தயாரிக்கப்படவுள்ளன.

இத்தகைய சிறுவர் இலக்கியத்தைத் தயாரிக்கும் முயற்சி சம்பந்தமாகப் பல எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் இவ்வியக்கத்தினர் தொடர்பு கொண்டுள்ளனர்.

பேராசிரியர் கே. இந்திரபாலா, திரு. வி. எஸ். வீரசிங்கா, திரு ரெஜி சிறிவர்த்தன. ஜி. குணதிலகா, பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வா ஆகியோர் இவ்வியக்கத்தின் இயக்குநர் குழுவில் இடம்பெற்றுள்ளனர். [க]

பாதிக்கப்பட்ட

# மாணவருக்கு, துணிகள் கொப்பிகள் விநியோகம்

(அரியாலை)

அமெரிக்க நாட்டின் அனுசரணையுடன் இலங்கையில் செயல்படும் சர்வதேச சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தென்னிலங்கையில் ஏற்பட்ட வகுப்புக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு வட பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதி பெற்றிருக்கும் மாணவ-மாணவிகளுக்கு கல்லூரி உடைகளுக்கான துணிகளையும், சப்பாத்துகள், கொப்பிகள், பென்சில்கள் என்பன வழங்கப்படுகின்றன.

இலங்கைக் கல்வி அமைச்சரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் செயல்படும் இந்தச் சபை யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரியில் தனது வட பிரதேச செயலகத்தை நிறுவிச் செயல்பட்டுவருகிறது. இச் செயலகத்தின் திட்டமிடல் அதிகாரியாக திரு எஸ். ஏ. செருபீம் பணிபுரிந்து வருகிறார்.

றெட்பானா ஸ்தாபனத்துடன் இணைந்து செயல்படும் இந்த ஸ்தாபனம் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இந்த உதவிகளை வழங்குவதுடன், பாடசாலைகளுக்கு வேண்டிய தளபாட வசதிகளையும் செய்து கொடுத்து வருகிறது. (ச)

## அகதிகளுக்கு இலவச பாத்திரங்கள்

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஜூலை மாத கலவரங்களினால் இடம்பெயர்ந்து அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு இலவச பாத்திரங்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே இது தொடர்பான பத்திரங்களை நிரப்பிக் கொடுத்திருக்கும் அகதிகளுக்கே இந்த பாத்திரங்கள் கையளிக்கப்படவுள்ளதாகவும், இவர்கள் தமது பிரிவு கிராமசேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு இன்று செவ்வாய்க்கிழமை சங்கானை கலாச்சார மண்டபத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இப் பாத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இலவச பாடப்புத்தகம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் அரசின் திட்டப் பிரகாரம் வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலைகளுக்கு இலவச பாடப்புத்தக விநியோகம் கடந்தவாரம் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா இந்த புத்தக விநியோகத்திற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

## வீடமைப்புக் கடன்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சாந்தையில் மாதிரிக் கிராமத்திட்டம் கைவிடப்பட்டதையடுத்து அங்கு ஏற்கனவே வீடுபெற தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அரசின் 10 லட்சம் வீடுகள் நிறுவும் திட்டத்தின்கீழ் வீடமைப்புக் கடன்களை பெற்றுக்கொடுப்பதற்கு யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி இதுதொடர்பாக யாழ். தேசிய வீடமைப்பு அதிகாரசபை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடாத்திய பேச்சுவார்த்தையையடுத்து இக்கடனுதவி வழங்கப்படவிருக்கின்றது.

வீடுகிடைக்க தெரிவுசெய்யப்பட்டவர்கள் தங்களது மாத வருமானம் தேவைப்படும் கடன் தொகை ஆகிய விபரங்களுடன் இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் யாழ் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு தங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## தேசிய கொடியை இளைஞர்கள் அறுத்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையில் சுதந்திர தினத்தையொட்டி கடந்த சனிக்கிழமை பறக்கவிடப்பட்டிருந்த தேசியக் கொடியை இளைஞர்கள் சிலர் அறுத்துச்சென்றுவிட்டனர்.

நேற்று பிற்பகல் அங்கு 6 இளைஞர்கள் சென்றதாகவும், மூவர் வெளியில் நிற்க மூவர் உள்ளே சென்று கொடியை அறுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (ச)

## தொலைபேசி சீர்கேடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியில் தொலைபேசிச்சேவை சீர்கேடு அடைந்துள்ளதால் இப்பகுதியிலுள்ளதொலைபேசிப் பாவனையாளர்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

அவசரதேவைகளுக்கு நீண்ட நேரம் காத்திருந்தாலும் தொலைபேசி அழைப்புகள் கிடைப்பது அரிதாகவுள்ளது என்று இவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

## நூலகக் கட்டடம் விரைவில் பூர்த்தியாகும்

(யாழ்ப்பாணம்)

துரிதமாக நடைபெற்று வரும் யாழ். பொதுசன நூலகக் கட்டட வேலைகள் மேமாத இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் கட்டட வேலைகளை நேரில் பார்வையிட்டார்.

தற்போதுள்ள கட்டடத்தையும், எரிந்த கட்டடத்தையும் இணைக்கும் பகுதியும் கட்டப்படவிருக்கிறது.

இதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படவிருக்கிறது. (ச)

## கசிப்புக் கடத்தினர் ரூ. 400 அபராதம்

(மட்டுவில்)

கசிப்புக் கடத்திய இளைஞர் ஒருவரை சாவகச்சேரிப் பொலிசார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் 400ரூபா அபராதம் விதித்தார்,

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வட்டன் கனகராஜா என்ற நபரையே பொலிசார் தனங்கிளப்பு வீதியில் வைத்துக் கைது செய்தனர்,

இவர் 16 போத்தல் உத்தரவின்றி வடிக்கப்பட்ட கசிப்பை தனங்கிளப்பிற்கு கொண்டு செல்லும் பேசதேகைது செய்யப்பட்டார். (சு)

## துப்பாக்கி முனையில் கார் கடத்தல்!

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டியிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு வந்த கார் ஒன்றைத் துப்பாக்கிமுனையில் இளைஞர்கள் கடத்திச் சென்றதுடன், சாரதியிடமிருந்து 2,030 ரூபாவை கொள்ளையடித்துள்ளதாகவும் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது

யாழ். தாதிகள் விடுதிக்கு முன்னால் கடந்த சனிக்கிழமை இக்கார்நின்றபோது துப்பாக்கியுடன் வந்த 4 இளைஞர்கள் அக்காரைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது

சாரதியிடம் 2,080 ரூபா இருந்ததாகவும் அதில் 50 ரூபாவை அவரின் போக்குவரத்து செலவுக்கு கொடுத்துவிட்டு, 2,030 ரூபாவை அவர்கள் கொள்ளையடித்ததாகவும் கூறப்படுகிறது. (ச)

## கருத்தரங்கு

(சண்டிக்குளி)

சுகவாழ்வு பற்றிய கருத்தரங்கு யாழ் மனித முன்னேற்ற நடு நிலையத்தில், நடைபெற்றது நிலைய அதிபர் வண. பிதா எம். ஈ. பயஸ் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் யாழ். சுகாதார அத்தியட்சகர் டாக்டர் சே. மாணிக்கம், யாழ் ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினர்

யாழ் நகர ஆலயங்களில் பங்கு இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொண்டனர்.

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதி ஸ்ரீ பூதநாத சுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 17-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## "பாடசாலை அபிவிருத்தியில் கிராம மக்கள் அனைவரும் பங்குபற்ற வேண்டும்"

(கரவெட்டி)

"தமது கிராமத்திலுள்ள பாடசாலை அபிவிருத்தியில் கிராமமக்கள் அனைவரும் பங்குபற்றவேண்டும் அப்பொழுது எமது சமுதாயம் கல்வியில் முன்னேறமுடியும்.

இவ்வாறு வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு சி. கணேசலிங்கம் இப்பாடசாலை அபிவிருத்திச் சங்க மாணவர் மன்றப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

"ஒருகிராமத்திலுள்ள பாடசாலையின் முன்னேற்றத்தில் அப் பாடசாலையில் உள்ள ஆசிரியர், மாணவர், அம்மாணவரின் பெற்றோர் மட்டும்தான் தொடர்பு கொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை. அக்கிராமத்திலுள்ள அனைத்துப் பிரஜைகளும் உதவ வேண்டும்" என்று கூறினார்.

# இன்றைய பலன்

தை மாதம் 24ம் திகதி
7—2—84
செவ்வாய்க்கிழமை

மேடம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள், அரசியல் வாதிகளுக்கு அதிர்ஷ்டதினம். குடும்ப மகிழ்ச்சியுண்டாகும்.

இடபம்: தூக்கம் இமை கனைத்தழுவமறுக்கும். ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவீர்கள் சகோதரவழியால் பகைகள் தோன்றும்.

மிதுனம்: பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும் இதயச்சுமை அகலும் தொழில் துறையில் புதிய வெற்றியுமுண்டாகும்.

கடகம்: நெடும் பயணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். தெய்வசித்தை வாழ்வும் கிட்டும்.

சிங்கம்: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்துக்கு இடமுண்டு ஆயுதபயமும் உண்டு அவதானம் வேண்டும்.

கன்னி: முழுமையான சம்பவங்கள் இடம் பெறும் வாழ்க்கையில் வசந்தம் நிலவும் களத்திரவழியால் லாபமும் உண்டாம்.

துலாம்: எண்ணியதில் தடை ஏமாற்றம் தாக்கும். தென்றலும் தீயாகமாறும் பொறுமையுடன் செயல் படவும்.

விருச்சிகம்: உங்கள் நடவடிக்கையில் தனிச்சிறப்பு தென்படும். பிதாவழித்தனமும் சேரும் மனம்போல் வாழ்வு இன்று மலரும்.

தனுசு: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். நன்மாற்றங்களும் ஏற்படும். சுற்றுடலிலும் மதிப்புயரும்.

மகரம்: பொருள் வரவுக்கு இடமுண்டு தொழில்லாபநிலை சீரடையும் குடும்பசந்தோஷம் உண்டு சுபகாரியம் ஒன்றும் இடம் பெறலாம்.

கும்பம்; குடும்பத்தில் பூசல்கள் தோன்றும் பணவிரயமும் உண்டாம் ஏமாற்றம் தாக்கும் எவ்விடயத்திலும் முன்யோசனை நன்று.

மீனம்: வாழ்க்கையில் நிம்மதி அகலும் பகைகளும் உருவாகும் குடும்பப்பிரியும் உண்டு சுமுகமான தினம்.

திருமலை க. வேலுப்பிள்ளை
புத்திரன் வே. குவேந்திரன்
சோதிடக் கலாநிதி

## கொய்யாத்தோட்டம் கொலை வழக்கு: இரு எதிரிகளும் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

கொய்யாத் தோட்டம் கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கொய்யாத் தோட்டத்தில் 83 மார்ச் 24ம் தேதி செல்வரத்தினம் கபிரியல், அல்லது பாபு என்பவரை கொலைசெய்ததாக, புத்திசேனு லொறன்ஸ் ஆகியோர் மீது குற்றம்சாட்டப் பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசாவும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதனும், சட்டத்தரணி எஸ். கனகசபாபதியின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் சிறிதரன் ஆஜரானார். (ச)

## பனை ஓலைப் பொருட்கள்: ஏற்றுமதி செய்வதன் மூலம் பொருளாதாரத்தைப் பெருக்கலாம்

(அரியாலை)

"பெட்டிகளையும், பாய்களையும் குடிசைக் கைத் தொழிலாக பனை ஓலையினால் செய்து நாம், இன்று பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியவகையில் அழகான தரமுள்ள பொருட்களையும் செய்யமுடியும் என்பதை நிலைப்படுத்தியுள்ளோம். பனை ஓலையினால் செய்யப்படும் சிறந்த பொருட்களை வெளிநாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்து எமது குடும்பப் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பும் வழியும் இப்போது உள்ளது"

இவ்வாறு அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ரி சிவலிங்கம் அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா அரங்கில் பன்னோலைப் பயிற்சி நிலையத்தினைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இன்றுபயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் பெண்பிள்ளைகள் இத்தொழிலைநன்கு கற்றுப் பனைஓலை மூலம் சிறந்த பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்து நல்ல சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பனை ஓலையினால் செய்யப்படும் தரமான பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யவும், உற்பத்தியாளர்களுக்கு நல்ல ஊதியத்தை வழங்கவும் பனம்பொருள் அபிவிருத்திச் சபை திட்டமிட்டுச் செயல்பட்டுவருகிறது.

பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இக்கிராமம் காலகதியில் பனம் பொருட்களை ஏற்றுமதி செய்யும் உற்பத்தியாளர்களைக் கொண்ட கிராமமாக மாறவேண்டும். இதற்கு வேண்டிய சகல உதவிகளையும் அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் செய்துதர ஆயத்தமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார். உப செயலாளர் திரு. இ. குலேந்திரன் கூறினார். (ச)

## ஆண்டு விழாவும் பொருட்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் ஆண்டு விழாவும் பொருட்காட்சியும் இன்றும் நாளையும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது

இப்பொருட்காட்சியில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் கலந்துகொள்வார் திருமதி விக்னேஸ்வரன் பரிசில்களை வழங்குவார். இல்லப் போட்டி இல்லக் குழந்தைகளின் பண்ணிசை, யோகாசனம், நடனம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (வெ)

## ரூபவாஹினியில் 'ஹரிச்சந்திரா'

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் நாளை புதன்கிழமை இரவு ஹரிச்சந்திரா' என்ற தமிழ்ப்படம் ஒளிபரப்பப்படவுள்ளது இப்படத்தில் சிவாஜி கணேசன், வரலக்ஷ்மி, கே. ஏ. தங்கவேலு ஆகியோர் உட்பட பலர் நடித்துள்ளனர். (வெ)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-30,
எம்.ஜி.ஆர்.—ஜெயலலிதா
அன்னமிட்ட கை

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் —லதா
சிரித்து
வாழவேண்டும்
(கலர் - புதிய பிரதி)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
55-வது நாளாக
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்

9-2-84 வரை
வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(புதிய பிரதி-கலர்)

7 "சூப்பர் ஹிட்" பாடல்களுடன் மங்கையர் மனங்கவர்ந்த வண்ண காதலோவியம்.
றீகல் (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
மோகன்... பூர்ணிமா
பயணங்கள்
முடிவதில்லை

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-15 4-45, and
7-00 P. M.
CAPTAIN
AMERICA
STARRING
Christopher Lee.
Reb, Brown,
Lanawood
Action Packed Thrill
Color

ஹரன் (யாழ்.நகர்)
பஸ்சேவை இரவு 9மணி வரை நீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாலைக் காட்சி 6 மணிக்கு ஆரம்பமாகும். அழகிய மலேயா நாட்டின் இயற்கைப் பின்னணியில் "வேண்டும் வேண்டும் உங்கள் உறவு" என்று கானமிசைத்த இளங்காதலரின் கதை
சிவாஜி, ஸ்ரீப்பிரியா, நடித்த
வசந்தத்தில்
ஓர் நாள்
(ஈஸ்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
சிவாஜி - சரோஜாதேவி
ஆலயமணி
(புதிய பிரதி)

10-2 84 முதல்
கமல் — ஸ்ரீதேவி
இந்தியாவில் முதல்முறை திரையிடப்பட்டு தடைசெய்யப்பட்டு மீண்டும் திரையிட்ட பொழுது மாபெரும் வெற்றியீட்டிய
மீண்டும் கோகிலா
இலங்கையின் இன்பக் காவியம்.

# "பனையின் மூலவளத்தை சரிவரப் பயன்படுத்த வேண்டும்!"

(வண்ணார்பண்ணை)

"இலங்கையின் மூலவளத்தை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் தான் எமது நாட்டின் பூரண சுதந்திரத்தை நாம் அனுபவிக்க முடியும். மூலவளங்களின் பயனை சகல மக்களும் அனுபவிக்க வேண்டும். எமது நாட்டின் மூலவளஏற்றுமதிப் பொருட்களில் பனை உற்பத்திப் பொருட்களும் அடங்குவதையிட்டு நாம் பெருமைப்படாமல் இருக்க முடியாது பனை மரத்தின் பயனையும் இந்த நாட்டிலுள்ள சகல மக்களும் பயன் படுத்த வேண்டும்."

யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட மூன்றுமாத கால பயிற்சிநெறி வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு.க. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், "பனை வளத்தின் சிறப்புகளையும் பயனையும் மூலவளம் நிறைந்த பகுதிமக்களே அனுபவித்து வந்தனர். இன்று சகல மக்களும் இதன் பயனை அனுபவிக்கத்தக்க வகையில் பனை அபிவிருத்திச்சபை இயங்கி வருவதும், இச்சபையின் தலைவரது துரிதமான செயற்பாடுகளும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். பனை வளத்தை நமது முன்னோர் சிறப்பாக பயன்படுத்தி வந்துள்ளனர்: காலப்போக்கில் இந்த வளம் உரிய முறையில் பயன்படுத்தப்படாது வந்தது. இன்று பனை அபிவிருத்திச் சபை இயங்கத் தொடங்கிய பின் இதன் பயன் ஓரளவு விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. அரசின் நடவடிக்கையின் பயனாக பொதுநல நாடுகளின் உதவியுடன் பனைத்தொழில் நிபுணர் கே. சம்பந்தம் எமது நாட்டிற்கு வரவழைக்கப்பட்டது எமது இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலும் வெற்றியைக் கொடுத்துள்ளது எனலாம். அவரது ஆலோசனையும், சேவையும் பனை அபிவிருத்திக்கு பெரிதும் துணையாக உள்ளது. இவரின் ஆலோசனைகளை பயன்படுத்தி நாம் பனை அபிவிருத்தியில் மேலும் பல முன்னேற்றங்களை காணவேண்டும். இதற்கு இன்று ஆரம்பமாகும் பயிற்சி பயன் படும் என நம்புகின்றேன்" என்றார். இவ்வைபவத்தின்போது சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா அரசாங்க அதிபருக்கு பனை ஓலை மாலை அணிவித்து வரவேற்றார் பயிற்சியாளர்களுக்கு திரு க. கனகராசா அப்பியாசப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

பயிற்சியாளர்களுக்கான முதலாவது விரிவுரையை திரு. சம்பந்தன் ஆரம்பித்துவைத்தார் 'பனம்விதை நடுகையிலிருந்து ஏற்றுமதிவரை இப் பயிற்சி நெறியின் விரிவுரைகளில் இடம்பெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிரிக்கெட் டெஸ்ட்
# நியூஸிலாந்து வெற்றி

வெலிங்டன், பெப் 6

இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்கும் இடையே நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் நியூஸிலாந்துக் கோஷ்டி இன்னிங்ஸாலும் 132 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 307 ஓட்டங்களை எடுத்தது. இங்கிலாந்து கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 93 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிஸில் 82 ஓட்டங்களையும் எடுத்தது.

இங்கிலாந்திற்கும் நியூஸிலாந்துக்குமிடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே.

(வெ)

# இடமாற்றம்

மன்னார்)

குடிசனப் புள்ளிவிபர திணைக்களத்தைச் சேர்ந்த புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு. துரையப்பா விஜயசிங்கம் இம் மாதம் முதல் மன்னார் கச்சேரியிலுள்ள புள்ளிவிபரப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார், இவர் புலமைப் பரிசு பெற்று கல்கத்தாவிலுள்ள சர்வதேச புள்ளிவிபர கல்வி நிலையத்தில் புள்ளிவிபர பிரிவிலும், ஜப்பானில் உள்ள ஆசிய பசுபிக்கிற்கான புள்ளிவிபர நிலையத்தில் தேசிய வருமான கணக்கியலிலும் உயர் பயிற்சியும் பெற்றவராவார்.

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
சிவாஜி - ஸ்ரீவித்யா
இமயம்
(புதிய வண்ணப் பிரதி)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.—லதா
நீதிக்கு
தலைவணங்கு

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே வரும்
கீதம்
(ஈஸ்மன் கலர்)
பஸ்சேவை இரவு 9-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது தொடர்ந்து மாலைக்காட்சி 6 00 மணிக்கு ஆரம்பமாகும்.

## யாழ். கல்வித் திணைக்கள
# நலன்புரிச்சங்க புதிய நிர்வாகிகள்

(கல்வியங்காடு)

யாழ் பிரதேச கல்வித் திணைக்கள நலன்புரிச் சங்கத்தின் இவ்வருட புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு சங்க போஷகரும், யாழ் கல்வித் திணைக்கள கல்விப்பணிப்பாளருமான திரு ம சிமியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் ஆரம்ப உரை நிகழ்த்துகையில், "இத்தகைய சங்கங்கள் காரியாலய ஊழியர்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி சேவை உணர்வை வளர்ப்பதற்கு மிகவும் உதவுகின்றன" என்றார்.

உத்தியோகத்தர் தெரிவு வருமாறு: தலைவர்: கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு.கே.சந்திரராஜா, உபதலைவர்கள்: திரு. வே சபாநாயகம், திரு. ஆர். சோதிப்பிரமநாதர், செயலாளர் திரு. ஆர். தவராசா, உபசெயலாளர் திரு. எஸ். பூபாலசிங்கம், பொருளாளர்: திரு. கே. சிவானந்தம், விளையாட்டுத்துறைச் செயலாளர்: திரு. சி. திருஞானம், கலாசாரச் செயலாளர்: திரு. கே. தெய்வகுலரட்ணம், இவர்கள் அனைவரும் ஏகமனதாகத் தெரிவாகினர்.

இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பொதுநலச் செயலாளராக திரு ஆர். பொன்னையாவும், நூலகப் பொறுப்பாளராக திரு. எஸ். வீரசத்திப் பிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இரகசிய வாக்கெடுப்பின் போது வரிசைக்கிரமமாகப் பெற்ற வாக்குகள் அடிப்படையில் பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவாகினர். திருவாளர்கள் எம். பரமானந்தம், ரி. விவேகானந்தா, பூ. முத்துக்குமாரசுவாமி, வீ. பரமேஸ்வரன், திருமதி எஸ். மகேஸ்வரன்.

## பனந்தொழில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தம், சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா, திரு. சம்பந்தம், ஓய்வுபெற்ற விவசாய அத்தியட்சகர் திரு. பேரின்பநாயகம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி இவ்வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர்.

பயிற்சி வகுப்புகளில் பனைவளம், பனைத்தொழில், பனைப்பொருள் ஏற்றுமதி ஆகியவற்றில் அனுபவமும் ஆற்றலும் மிக்கபலர் விரிவுரையாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சிக்குப் பனம்பொருள் பயிற்சி நிலையங்கள், பனம்பொருள் உற்பத்திச் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து மாணவ, மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆரம்ப நிகழ்ச்சியின்போது முதலாவது விரிவுரையை பனைத் தொழில் நிபுணர்திரு சம்மந்தம் தொடக்கி வைத்தார்.

பனை மரத்தின் உற்பத்தியும் அதன் வளர்ச்சியும், அவற்றின் இனங்களும் பற்றி, விரிவுரையாற்றிய அவர், பனைமர நடுகையிலிருந்து பனையின் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி வரை தனது உரையைச் சுருக்கமாக நிகழ்த்தினார்.

[வண்-நிருபர்]

## கிளிநொச்சி முருகண்டி கொலை—
# மூவர் கைது!
## இருவரைத் தேடி வேட்டை!!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகண்டி பொன்னகர் கிராம முன்னேற்றச்சங்க செயலாளர் கொலைச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேகநபர்களை கிளிநொச்சி பொலிசார் கைதுசெய்துள்ளனர். மேலும் தலைமறைவாகியுள்ள இரு சந்தேகநபர்களைத் தேடிப்பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

பொன்னகர் கிராம முன்னேற்றச்சங்க செயலாளரான மலையகத்தைச்சேர்ந்த சண். சுப்பிரமணியம் [42 வயது] கோஷ்டி ஒன்றினால் அடிகாயங்களிற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமாகி இருந்தார் இம் மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவம் 18-1-84ல் இரவு 11 மணியளவில் பொன்னகர் கிராமத்தில் இடம்பெற்றிருந்தது. இது தொடர்பான வாய்முறைப்பாடு ஒன்றையும் மரணமானவர் கிளிநொச்சி பொலிசிற்கு கொடுத்திருந்தார்.

கொலையுண்ட சுப்பிரமணியம் முதலில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறும் போது சென்ற மாதம் 31ம் திகதி மரணமானார்.

பல சமூகசேவை இயக்கங்களுடன் தொடர்புகொண்டு மலையக மக்களின்நல வாழ்வுக்காக பாடுபட்டுவந்த இவரது மரணம் கிளிநொச்சிப் பகுதியில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கிளிநொச்சிப் பொலிசார் மேற்கொண்ட துரித முயற்சியின் பயனாக பொன்னகரைச் சேர்ந்த முனியாண்டி திருச்செல்வம், சுப்பையா இராசேந்திரம், தங்கவேலு, டில்லிராசா ஆகிய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். இக்கொலையுடன் தொடர்புடைய மேலும் இருவரைத்தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

DIPLOMA IN
MANAGEMENT
(முகாமைக் கற்கை நெறி)

க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்கள் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

கணக்கியல், கணக்காய்வு,
முகாமை, வரி கணிப்பீடு

ஆகிய துறைகளில் பூரண பயிற்சியளித்தல். இப் பயிற்சி நெறி முடிவடைந்ததும் சுயமாக நிறுவனங்களில் வருமானவரிக் கணக்கு எழுதக் கூடிய வகையில் பயிற்றப்படுவீர்கள்.

பூரண விளக்கங்களையும் விண்ணப்ப படிவத்தினையும் பெற விரும்புவோர் ரூபா 10/- அனுப்பி நேரில்/தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு. பொறுப்பாளர்,
தொழிற் கல்விச் சேவைகள் பிரிவு,
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.



யாழ். மாவட்ட திரிசாரணர் குழுவின் சேவை நிதிக்கான அதிர்ஷ்டலாப முதல் சீட்டினை குழுவின் தலைவர் திரு. ஜி. எஸ். அருணமதாஸிடமிருந்து யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன்நேசையா பெற்று விற்பனையை ஆரம்பித்துவைப்பதை படத்தில் காணலாம். மத்தியில் குழுவின் பொருளாளர் திரு. கே. ஆர். சிறீதரனும் காணப்படுகின்றார்.

"இந்திய வம்சாவளியினரின் பொதிகளுக்கு

# மேலதிக கட்டணம் அறவிடுவதை தவிர்க்கவும்

## இந்தியத் தூதுவருக்கு மகஜர்

(மன்னார்)

"இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தாயகம் செல்லும் இந்திய வம்சாவளியினர் எடுத்துச் செல்லும் பொதிகளுக்கு ரயில் நிலையங்களில் மேலதிக கட்டணம் அறவிடப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை உடன்மேற்கொள்ளவும்"

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினை தலைமன்னார்துறை நலன்புரி அதிகாரி திரு எம். சர்க்காரியால் தலைமன்னார்துறை இந்திய தூதரகத்தின் பிரதிநிதி திரு. எஸ். ரங்கநாதன், தலைமன்னார்துறை இ. தொ. கா. பிரதிநிதி திரு. சேவியர் பெர்னாண்டோ ஆகியோர் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவருக்கும் இ. தொ. கா தலைவருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நானு ஓயா டெஸ்போட் தோட்டத்தைச் சேர்ந்த வீ. வீரமுத்து வி. மூத்துசாமி கே வீரப்பன் ஆகியோர் தமது குடும்பங்களுடன் கப்பல் மார்க்கமாக தாயகம் செல்ல தமது பொதிகளை நானுஓயா ரயில் நிலையத்தில் ஒப்படைத்தனர். இவர்களது பொதிகளுக்கான கட்டணம் 142 ரூபா 95சதமாகும்.

"இவர்கள் இரண்டாயிரம் ரூபாவை செலுத்தினால்தான் இவர்களது பொதிகள் ஏற்கப்படுமென ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

"இவர்களிடம் இரண்டாயிரம் ரூபா இல்லாததால் இறுதியில் பொதிகளுக்கான கட்டணமாக 1500 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

"தாயகம் திரும்பும் பிரயாணிகளிடம் பொதிகளுக்கான கட்டணமாக மேலதிக பணம் அறவிடுவதால் இவர்கள் பல சிரமங்களுக்குள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# மரண அறிவித்தல்

ஊரெழு மேற்கு

## திருமதி தம்பித்துரை மங்கையற்கரசி

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியர் தம்பித்துரையின் அன்பு மனைவி மங்கையற்கரசி (ஆசிரியை ஊரெழு கணேச வித்தியாசாலை) சிவபதமடைந்தார். அன்னார் ஊரெழு இராசதுரை காலம்சென்ற திருமதி இராசதுரை ஆகியோரின் அன்பு மகளும், பஞ்சரெத்தினம் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்), சற்குணம், பத்மாவதி ஆசிரியை, ஊரெழு கணேச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். ஈமக்கிரியைகள் இன்று 7-2-84 செவ்வாய் பகல் 11-00 மணிக்கு ஊரெழுவில் நடைபெறும். 652



# மரண அறிவித்தல்

## சின்னப்பு பேரம்பலம்

வட்டுக்கோட்டை இராஜன் புத்தகசாலை (பின்கபே) மனேஜர் திரு. சின்னப்பு பேரம்பலம் (இராசேந்திரம்) அவர்கள் 2-2-84 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இறுதிச்சடங்குகள் 3-2-84 வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெற்றது. இவர் திருமதி முத்தாச்சியின் அருமைக் கணவரும், தனபாக்கியவதி, சோமசேகரன் (அரச வழங்கல்கள் திணைக்களம், கொழும்பு), இராஜராஜேஸ்வரி (ஆசிரியை, வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை), விமலாதேவி (விக்ரர் அன் சன்ஸ்), இராஜராஜன் (வரிசேகரிப்பாளர், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவ் அறிவித்தலை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

பே. சோமசேகரன், அரசடி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. 656


## சமூக அபிவிருத்தி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி தென்மேற்கு தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க காரியாலயத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலரத்தினம் தலைமையில் இம்மாதம் 10ம் திகதி காலை இச் சங்கத்தின் சமூக அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு எஸ். வேலாயுதம் பிள்ளை, சங்கானை கலாவி பொறுப்பதிகாரி திரு ஏ ஜெவில்வராசா, கூட்டுறவு தலைமைக் காரியாலயப்பரிசோதகர் திரு. ம. அந்தோனிப்பிள்ளை, சங்கானை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவினர், வீடமைப்புத் திணைக்கள பகுதியினர், சங்கானை மக்கள் வங்கி பொதுமுகாமையாளர் திரு. ஐ கணேசலிங்கம், சமாசத் தலைவர் திரு. இ. அமிர்தநாதன், வலி தென்மேற்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கிராமசேவையாளர்கள், சங்க நிர்வாகிகள், சங்கப் பொதுமுகாமையாளர் ஆகியோர் உட்படப்பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கவிதை நூல் அறிமுக விழா

[மன்னார்]

மன்னார் வாசகர் வட்டத்தின் வெளியீடான கலைவாதி கலீலின் 'கருவறையிலிருந்து கல்லறைக்கு' என்ற கவிதை நூலின் அறிமுகவிழா மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயத்தில் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூல் தலைமையில் நடைபெற்றது.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இவ்விழாவில் மன்னார் பிரதேச கல்விப்பணிப்பாளர் செல்வி பி ஆறுமுகம், மன்னார் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே பரமேஸ்வரன், மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாஸ்கரதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திருமதி இராஜம் புஸ்பவனம் அறிமுகவுரையாற்றினார்.

மன்னார் அல் அஸ்ஹர் மகா வித்தியாலய அதிபர் ஜனாப் எம். எம். அப்துல்காதர், தமிழ் முழக்கம் முகமதுகாசிம் ஆலிம் புலவர் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

சட்டத்தரணி என். எம். ஐயூப் திரு கார்மேகம் நந்தா ஆகியோர் ஆய்வுரை வழங்கினர்.

முதலாவது பிரதியைச் சட்டத்தரணி லயன் ஏ எஸ். ஜோன்தாசன் பெற்றுக்கொண்டார். [வெ]

## நூல்நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை இளைய தம்பி இந்து வித்தியாலயத்தில் "இது எமது பாடசாலை வாரத்தை' முன்னிட்டு பெற்றோராலும், பரோபகாரிகளாலும் புனரமைக்கப்பட்ட நூல் நிலையத்தை யாழ் கல்வி அதிகாரி திரு சி தியாகராசா இன்று செவ்வாய்க்கிழமை காலைதிறந்துவைப்பார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். சிவநாயகமூர்த்தி, தொழில்அதிபர் க சனகராசா, திரு. செ. கந்தசாமி ஆகியோரும் ஆசியுரை வழங்கவுள்ளனர் பெற்றோரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பல நூல்களை அன்பளிப்பாக வழங்கயுள்ளனர்

அதிபர் திரு கா. கணேசதாசன் தலைமையில் இவ்வைபவம் நடைபெறவுள்ளது (வெ)

# இப்படியும் நடக்கிறது

"சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு தமிழர்விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கமும், முன்னாள் திருகோணமலை எம். பி. திரு ஆர். சம்பந்தனும் சென்னையிலிருந்து இன்று புறப்படுகின்றனர் என்று பி ரி. ஐ செய்தி தெரிவித்துள்ளது".

மேலே நீங்கள் படித்தது செய்தி. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்செய்தி அறிக்கையில் இது இடம்பெற்றிருந்தது.

ஒருவர் சுதைத்தால் இரகசியம்; இருவர் சுதைத்தால் பரம இரகசியம் என்பார்கள். இதனைச்சற்று தலைகீழாகப் பார்ப்போம்.

பரம இரகசியம்; மேற்படி செய்தி. ஓர் எழுத்துக்கூட மாற்றம் அடையாமல் நேற்று முன்தினம் இரவும், நேற்றுக்காலையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்செய்தி அறிக்கையில் இடம்பெற்றது.

இரகசியம் (காதோடு காதாக):

திரு. அமிர்தலிங்கமும், திரு சம்பந்தனும் நேற்று முன் தினம் பகலே கொழும்பு திரும்பிவிட்டனர்!

"ஊடுருவி"

## பட்டதாரி ஆசிரியர்..!.

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

பட்ட பட்டியலுக்கமைய இடமாற்றம் செய்யப்பட இருந்த சகல பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் கிடைக்கும் என்று திரு. விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

புதிய பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டமையினால் இந்த இடமாற்றத்திட்டத்தை அமுல் செய்வதில் சிரமம் எதுவும் இருக்காது என்றும் அவர் கூறினார்.

வன்செயல்காரணமாக இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களான வடக்கு—கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் அதேவேளையில் பட்டதாரி ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றால் வடக்கு - கிழக்கில் மேலதிக ஆசிரியர்களும் ஏனைய பகுதிகளில் ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடும் ஏற்படும் நிலை தோன்றுமா என அமைச்சரிடம் கேட்டபோது பின்வருமாறு அவர் பதில் கூறினார்.

பட்டதாரி ஆசிரியர்கள் வெளிமாகாணங்களில் நியாயமான காலப்பகுதி கடமையாற்றியிருக்கும் பட்சத்தில் அவர்களை அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்வது அவசியம்.

இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்கள் இடமாற்றத்திட்டத்தைப்போன்று இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றத் திட்டத்தையும் கல்விச்சேவை குழு தற்போது தயாரித்து வருகின்றது என்றும் திரு ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

## பாதுகாப்பான.-.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளம் கடலுக்கு செல்லும் என்றும் இதனால் வெள்ள அபாயம் நீங்கும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார். யாழ். மாநகரசபை பொறியியலாளரும் நேற்று நீர்ப்பாசன இலாகாவிற்குநேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ் மாவட்டத்தில் பல இடங்களிலும். வெள்ள நிலைமைபற்றி யாழ் சமூக சேவைப்பகுதிக்கு தகவல்கள் வந்துகொண்டிருப்பதாகவும், உதவி அரசாங்க அதிபர்களிடமிருந்து அறிக்கைகள்கிடைத்த பின்னரே நிவாரணம் பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் சமூகசேவைப்பகுதியினர் தெரிவித்தனர். (க)

## கிளிநொச்சி மாவட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

'சங்கரி'க்கு பாராட்டு

கிளிநொச்சி புதிய செயலகத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட பல பிரமுகர்களும், கிளிநொச்சி முன்னாள் எம் பி. திரு. வி ஆனந்தசங்கரிக்கு பாராட்டுத்தெரிவித்தனர்.

'இன்று நடைமுறைக்கு வரும் திட்டத்துக்கு கர்த்தாவாக இருந்தவர் திரு. ஆனந்தசங்கரிதான். அவர் இன்றைய வைபவத்தில் கலந்துகொள்ளாவிட்டாலும் அவரது முயற்சியினால் தான் கனவு நனவாகிறது" என்று மேற்படி வைபவத்தில் கலந்து கொண்ட பலரும் கருத்து வெளியிட்டனர்.

## 4 லட்சம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு கிடைத்துள்ள தகவலின்படி, 78 ஆயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளதால் சுமார் 4 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (கு)

## சர்வகட்சி மாநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குந்தகம் ஏற்படுத்துவதாக இருப்பதால் மாநாட்டில் கலந்துகொள்வதில் பலனில்லை என்றும் கூட்டணி இந்தியாவிடமிருந்து யோசனைகேட்பது நாட்டு ஒருமைப்பாட்டுக்கு தீங்குவிளைவிப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

## அநுரா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை என்று எதிர் கட்சித்தலைவர் திரு. அனுராபண்டாரநாக்கா மாநாட்டு செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## சு.க.க்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஒன்றுகவே அமர்ந்து விவாதிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தமாநாட்டில் கலந்துகொள்ளுமாறு சுதந்திரக்கட்சிக்கு மீண்டும் அழைப்பு விடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய மாநாட்டில் முக்கிய ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காக உயர் அதிகாரிகளும் சட்டவல்லுனர்களும் கலந்து கொண்டனர்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number D 100236/81 Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.